### கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி I (வெளிவாரி) - 2004/05
### (ஒக்ரோபர்/நவம்பர் – 2006)

### GEO 202 – வளங்களும் பாதுகாப்பும்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

உலக புறவரிப்படம் வழங்கப்படும். எழுத்துத்தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.
எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

01. (i) மூலவளம் என்பதனை வரையறை செய்க.

(ii) மனிதவளம் பெறுமதிமிக்க ஒருவளமாகக் கொள்ளப்படுவதற்கான காரணங்களை உதாரணங்களுடன் ஆராய்க.

02. (i) வளமுகாமைத்துவம் என்பதால் கருதப்படுவது யாது?

(ii) கைத்தொழில் மயமாக்கம் சக்திவளங்களின் பாவனையில் ஏற்படுத்தியுள்ள தாக்கங்களை மதிப்பீடு செய்க.

03. (i) அயன மழைக்காட்டு வலயங்களை உலக புறவரிப்படத்தில் குறித்துப் பெயரிடுக.

(ii) கடந்த மூன்று தசாப்தங்களில் இம்மழைக்காடுகள் துரிதமாக அழிந்து சென்றமைக்கு ஏதுவாயமைந்த காரணிகளைக் குறிப்பிட்டு இவை சூழலில் ஏற்படுத்தும் தாக்கங்கள் பற்றியும் மதிப்பீடு செய்க.

04. உலக கடல் வளங்களது பரம்பற் பாங்குகளை விபரித்து கடல்வளம் அழிவடைவதற்குப் பொறுப்பான காரணிகளையும் விளக்குக.

05. (i) மண் தரமிழப்பு என்பதால் கருதப்படுவது யாது?

(ii) மண் தரமிழத்தலுக்கான காரணங்களைக் குறிப்பிட்டு அதனைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளையும் விளக்குக.

06. “வளப் பாதுகாப்பும் தொலைநுகா்வுத் தொழில்நுட்பமும்” என்பது பற்றி கட்டுரை வரைக.

07. வளர்ச்சியடைந்த நாடுகளினதும், வளா்முக நாடுகளினதும் குடித்தொகை வளர்ச்சிப் போக்குகளை விளங்கிக் கொள்வதற்கு “குடிவரையியல் நிலைமாறு கோட்பாடு” எவ்வளவு தூரம் பொருத்தமானது என்பதை இவ்விரு நாடுகளுக்கும் உதாரணங்கள் தந்து விளக்குக.

08. எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பெழுதுக.

1. புதுப்பிக்கக் கூடிய வளங்களும், புதுப்பிக்க முடியாத வளங்களும்.
2. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரிப்பதில் தொழில்நுட்பத்தின் பங்கு.
3. நிலைபேண் அபிவிருத்தியின் அவசியம்.

*********